# தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - ஒஸ்ரேலியா

# *Tamils Rehabilitation Organisation (Australia)*

*Annual Christmas Appeal – 2015*

TRO Australia wishes to thank the donor communities at large, who have generously contributed towards our various appeals over many years. In the one- time war zones of the North East of Sri Lanka there are many Widowed women, destitute children and other war affected persons 're-settled' who are all facing un-told hardships daily.

TRO Australia has continued to deliver assistance with particular focus on destitute children, frustrated youth, families who lost their loved ones and young vulnerable women, who have lost their parents or partners in the war and displacement.

As in the past several years, this year too- the volunteers of TRO Australia have made arrangements to conduct Christmas Radio-Thon appeal on 25 December 2015, with an objective to raise awareness of the plight of the war affected / re-settled people in North East of Sri Lanka and to appeal for donations towards the "Livelihood Assistance" program to 'Resettled' Women headed families.

These assistances are delivered via Community Based Organisations [CBOs] which operate with a high sense of dedication in the North East of Sri Lanka.

A total sum of $48,780 has been expended in the year 2015 towards the humanitarian programs undertaken by TRO Australia.



We give below a 'snap shot' of humanitarian assistance extended from January 2015 to November 2015 by TRO Australia and our on-going activities:

## Emergency assistance- Flood Relief

Emergency relief assistance was provided to flood affected people in the Eastern Province of Sri Lanka during January 2015 in the areas of Kattankudy, Porathivu Pattu, Eravur Pattu and Eravur Town.

The assistance extended included provision of cooked food, nutritional food items for children, dry food items, nonfood items and sanitation / health related services. A total sum of $3,445 was disbursed for this program.

## Early Childhood Development - Educational program

Livelihood assistance has been provided to resettled families with an objective of assisting children to continue their education with a focus to re-integrate them to normal life.



These included:

- Assistance with Early Childhood Development activities
- Provision of nutritional food/supplements to pre-school children Provision of learning materials to students to encourage continuation of education
- Capacity building and provision of teaching materials and
- Assistance with wages to preschool teachers and teachers training programs.

A sum of $23,380 was expended for these activities for this year so far.

## Psycho-Social Welfare

There is a growing need for greater assistance for the promotion of 'psychosocial welfare' among the resettled persons. Our assistance is extended to prioritised groups of traumatised orphans and depressed young widows.

- The activities undertaken with our funding includes:
- Counseling for stressed individuals
- Group counseling for traumatised children
- Counseling for families with conflicts in relationship and
- Grief therapy for widows and for depressed youth.

The outcomes of these programs are reflected in the Positive attitudes, self-acceptance of strengths and weakness, refection of mature relationships of the participants.

A funding budget of approx. $11,000 has been allocated for 2015 for this challenging program of which $4,680 has been disbursed to-date.

## Livelihood Assistance to Resettled Women:

This program is aimed at empowering war-affected 'resettled' women to become self-sufficient.

Selected beneficiaries are provided with capital and other suitable inputs for their livelihood and to engage in enterprises including Agriculture and Fisheries activities.

The beneficiaries are selected upon completion of a needs assessment. They are then assisted with livelihood Inputs such as:

Training in the preparation of food materials, food preservation methods, marketing and capacity building.

Assistance in the cultivation of vegetables, small business planning activities including material assistance in dairy farming and fishery activities. Farming equipment's, such as water pumps and related implements

Some women in the group are also assisted with provision of seed grains for cultivation of seasonal crops such as Green gram, Cowpea, Ground nut, etc.

A budget of $15,000 has been allocated for this program.



## Welfare Assistance to Children (Via Children Benevolent Fund).

TRO Australia has been able to assist in through the "CHILDREN BENEVOLENT FUND" which we launched in Sept 2009 to enable the provision of assistance to wider groups of children in need of relief, rehabilitation and basic education.

Assistance were extended to a considerable number of children including those who are living in institutionalised situations and those in the care of families who are in a poor or vulnerable economic status.

The target group of children in the Vanni district and Eastern province were provided with learning materials including exercise books, pens, pencils, school bags , food boxes and students' tables.

Also groups of traumatised children in institutionalised situations received on-going counselling to improve their mental wellbeing and improvement of self esteem/self development.



Educational and Welfare assistance was provided to selected 'war affected' students in Mullaitivu and Batticaloa districts with a focus to improve their concentration/capacity to learn and with provision of essential educational materials.

A sum of $12,105 was disbursed for Children welfare activities, via the Children Benevolent Fund.

## Special Education – coaching Classes to Science students.

This program is aimed at assisting a selected group of GCE O/L students who are assessed to be in need of intensive coaching to prepare and to build-up competency level to appear / face the challenges in writing the exams for the GCE O/L (Year 10) focusing in Science subjects.

A sum of $5170 was expended for this program.

***We thank-our donors, for your unrelenting support extended towards TRO – Australia's humanitarian programs and encourage you to make your contributions towards our <u>Christmas Appeal 2015</u>***

வருடாந்த நத்தார் வேண்டுதல் - 2015

ஆண்டுகள்தோறும் நாம் விடுத்த வேண்டுதல்களுக்கு மதிப்பளித்து, தாராளமாக அன்பளிப்புகள் செய்துவரும் அனைத்து இரக்க உள்ளங்களுக்கும் முதற்கண் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஒஸ்ரேலியா நன்றிசொல்ல கடமைப்பட்டுள்ளோம்.

இலங்கை வட-கிழக்கில் யுத்தம் நடந்து முடிந்த பிரதேசங்களிலுள்ள விதவைகளும், பெற்றோரை இழந்த சிறுவர்களும், மற்றும் மீள் குடியேற்றப்பட்டிருப்பதாகக் கூறப்படும் உடலும் உள்ளமும் பாதிப்புற்றிருக்கும் ஏராளமான மக்களும் சொல்லொணாத் துயரத்தையும் கஷ்டங்களையும் தினமும் அனுபவித்து வருகிறார்கள் என்பது யாவருமறிந்த விடயமே.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (ஒஸ்ரேலியா) அங்கு தாய் நாட்டிலிருக்கும் தற்போதைய நிலைமைக்கேற்ற தேவைகளுக்கும் சவாலுக்கும் தகுந்தவாறு தனது திட்டங்களை ஒழுங்குபடுத்திக்கொண்டதுடன், பாதிப்புற்றோருக்கான தேவைகளை இனங்கண்டு, அவர்களுக்கு பொருள்ரீதியானதும் உளநலரீதியானதுமான உதவிகளைச் செய்து கொண் டிருக்கின்றது.

கடந்த ஆண்டுகளைப்போலவே இவ்வாண்டும் (ஒஸ்ரேலியா) த.பு.கழகத் தன்னார்வத் தொண்டர்கள் எதிர்வரும் டிசெம்பர் 25ந் திகதியன்று வருடாந்த நத்தார் வேண்டுதலை நடத்த ஒழுங்குகள் செய்துள்ளார்கள். இவ்வாண்டு வேண்டுதலின் நோக்கங்கள் என்னவென்றால், யுத்தத்தால் பாதிப்படைந்தோர், இலங்கை வட-கிழக்கில் மீள் குடியேறியிருப்போர் பற்றிய விழிப்புணர்ச்சியை இந்நாட்டில் அதிகரிப்பதுடன், மீள்குடியேற்றப்பட்டிருக்கும் பெண்கள் தலைமையிலான குடும்பங்களுக்கு வாழ்வாதாரம் தேடிக்கொடுக்க வழிவகைகள் செய்தலுமாகும்.

அவ்வாறான உதவிகளை எமது கழகம் வட-கிழக்கிலுள்ள மனிதாபிமானமும் அர்ப்பணிப்பும் கொண்ட உயர் நோக்கத்துடனியங்கிவரும் சில சமூக நலன்சார் நிறுவனங்கள் மூலம் ஆற்றிவருகின்றது.

இவ்வாண்டுத் திட்டமானது யுத்தத்தால் பாதிப்புக்குட்பட்ட பெண்கள் தாங்களாகவே தங்கள் சீவாதாரத்தைத் தேடிக்கொள்ள உதவக்கூடிய விதமாக அமைக்கப்பட்டிருக்கின்றது.

2015 தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஒஸ்ரேலியா அங்கு நடைமுறைப்படுத்திய மனிதாபமான சேவைகளின் விபரங்களையும் மேற்கொண்டு செய்யத் திட்டமிட்டிருக்கும் செயற்பாடுகளையும் கீழே தருகிறோம்.



## அவசரகால நிதியுதவி – வெள்ளநிவாரணம்:

இலங்கையின் கிழக்கு மாகாணத்திலுள்ள ஏறாவூர், போரதீவுபற்று, காத்தான்குடி ஆகிய பிரதேசங்களில் 2015 ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் பெரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி அளித்திருந்தோம். சமைத்த உணவு, குழந்தைகளுக்குச் சத்துணவு, உலருணவு, அவற்றுடன் உணவல்லாத பொருட்கள், ஆரோக்கிய வாழ்வுக்குத் தேவையான பொருட்களைக் கழகம் உதவியது.

இந்தத் திட்டத்திற்கு மொத்தத் தொகை 3,445 டொலர்கள் செலவாகியுள்ளது.

## இளம் பிள்ளைகளின் முன்னேற்றம், கல்வி மேம்பாட்டுத் திட்டம்:

மீள்குடியேறியிருக்கும் குடும்பங்களுக்கு அவர்கள் பிள்ளைகளின் கல்வி நல்ல முறையாகத் தொடரவும், முக்கியமாக அவர்கள் பிறருடன் சகஜமான வாழ்க்கையைக் கடைப்பிடிக்கப் பழகிக்கொள்ளவும் வாழ்வாதார உதவிகள் மேற்கொள்ளப்பட்டன.

குழந்தைகளின் வளர்ச்சி முன்னேற்றத்திற்கான செயற்பாடுகள், மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்குத் தேவையான கல்வி உபகரணங்கள்,அவர்களின் ஆற்றல் விருத்தி, மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்குத் தேவையான கற்பிப்பு உபகரணங்களுடன் அவர்களுக்கு உதவிச்சம்பளமும், பயிற்சித் திட்டமும் வழங்கப்பட்டன.

இந்த சேவைக்கு 23,380 டொலர்கள் 2015ம் ஆண்டு இற்றைவரை செலவாகியிருக்கிறது.

## உளநல-சமூக நலன்புரி திட்டம்:

மீள்குடியேறியிருக்கும் மக்கள்மத்தியில் உளநல-சமூக நலன் சம்பந்தமான உதவிகளின் தேவை அதிகரித்திருப்பதாகக் காணப்படுகின்றது. அதனால் முன்னுரிமை பெற்ற அனாதைப்பிள்ளைகளுக்கும் மனச்சோர்வடைந்திருக்கும் விதவைகளுக்கும் சேர்த்து உதவிகள் அளித்திருக்கிறோம். நாம் மேற்கொண்ட பணஉதவித் திட்டங்களில், தனிப்பட்டவர்களின் மனஇறுக்கத்தினைச் சாந்திப்படுத்துவது, மனஅதிர்ச்சிக்குள்ளான சிறுவர்களுக்குப் புத்திமதி கூறி ஆற்றுதல், முரண்பாட்டுக்குள் சிக்குண்ட குடும்பங்களுக்கு நியாயத்தை எடுத்துக்கூறி சமாதானம் செய்தல், மனக்கிலேசமுற்றிருக்கும் விதவைகளுக்கும். சோர்வுற்றிருக்கும் இளைஞர்களுக்கும் அறிவுரைகூறி அவர்களைக் குணப்படுத்துதல் முதலான சேவைகளும் அடங்கும்.

அவ்வாறு நாம் அளித்திருக்கும் சேவைகளின் பலாபலன் அவற்றைப் பயன்படுத்திக்கொண்டவர்களின் பிந்திய நடைமுறைகள் மூலமும், அவர்கள் தமது வலிமையையும் பெலவீனத்தையும் உணர்ந்து கொண்டதற்கு அடையாளமாக அவர்களின் திடமான மனப்போக்கு பிரதிபலிக்கின்றது. இந்த நலன்புரி திட்டத்திற்கென நடப்பாண்டுக்கு 11,000 டொலர்கள் ஒதுக்க வேண்டிய தேவையுள்ளது. அத்தொகையில் இற்றைவரை 4,680 டொலர்கள் செலவாகியுள்ளது.

## மீள்குடியேறியிருக்கும் பெண்களுக்கு வாழ்வாதாரக்கான உதவிகள்:

மீள்குடியேற்றப்பட்டிருக்கும் பெண்களுக்கு "வாழ்வாதாரத்திற்கு வெளியுதவி" முக்கியமென த.பு.கழகம் ஒஸ்ரேலியா உணர்ந்துகொண்டது. அதனால் அப்பெண்கள் தாங்களே தங்கள் வாழ்வாதாரத்தைத் தேடிக்கொண்டு சுயேச்சையாக வாழ்வதற்கு இந்தத் திட்டம் உதவுகிறது. 35 வயதுக்குக்கு குறைந்த விதவைப்பெண்களில் தேவைகள் அவசியமானவர்களுள் கமஞ்செய்யக்கூடியவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான சில உதவிகளைச் செய்தோம். அவ்வுதவிகளாவன, பயிர் செய்கைக்குத் தேவையான தண்ணீர்ப் பம்புகள் முதலிய உபகரணங்களைக் கொடுத்தல், உணவுப் பொருள்கள் தயாரித்தல், உணவைப் பத்திரப்படுத்துதல், சந்தைப்படுத்தல், காய்கறிப் பயிர்களை உண்டாக்கி வளர்த்தல், சிறு வியாபாரங்கள் செய்தல் முதலிய செயற்பாடுகளில் அவர்களை ஈடுபடுத்துதலாகும். அவர்களுள் சிலபெண்களுக்கு ஏற்ற பருவகாலத்திற் பயிரிடக்கூடியதான பாசிப்பயறு, அவரை, நிலக்கடலை முதலியவற்றின் விதைகள் விநியோகிப்பட்டன.

மேற்படி சேவையை முற்றாகக் கையாள்வதற்காக, இலங்கை வடகிழக்கில் நிலைகொண்டிருக்கும் சில உதவி நிறுவனங்களோடு நாம் ஏற்படுத்தியிருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, அவர்கள்மூலம் நாம் இத்திட்டச் செயற்பாடுகளுக்காக இவ்வாண்டு 15,000 டொலர்கள் தேவைப்படுகின்றது.

## சிறுவர் நலன்காப்பு நிதியம் எனப்படும் சிறுவர் நலன்காப்புத் திட்டம்:

உதவியளிக்கும் ஸ்தாபனங்களுக்குள் அடக்கப்பட்டவர்களுக்கும், தாக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த, ஆனால் பொருளாதாரரீதியில் நலிந்த, நிலையிலுள்ளவர்களினது ஏராளமான பிள்ளைகளுக்கும் உரிய உதவிகள் நீடிக்கப்பட்டிருக்கின்றன. 2009 செப்டெம்பரில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட எமது "சிறுவர் நலன்காப்பு நிதியம்" மூலம் நிவாரணம், புனர்வாழ்வு, அடிப்படைக் கல்வி முதலியன தேவைப்பட்ட சிறுவர்களுக்கு உதவிகள் செய்துவருகிறோம். வன்னிமாவட்டத்திலுள்ள சிறுவர்களுக்கு அவர்களின் கல்விக்குத் தேவையான அப்பியாசக்கொப்பிகள், புத்தகங்கள், பேனா பென்சில்கள், பள்ளிப்பைகள், உணவெடுத்துச் செல்வதற்கான பெட்டிகள் முதலியன விநியோகிக்கப்பட்டன.

உதவிஸ்தாபனங்களில் வசிக்கும் மனஅதிர்ச்சியுற்றிருக்கும் பிள்ளைகளுக்கு அவசியமான மனநிலையை நல்லாற்றுப்படுத்தவும் அவர்களுக்கு தன்நம்பிக்கையையும் தன்மதிப்பையும் வளர்த்துக்கொள்வதற்கான அறிவுரைகள் அளிப்பதன்மூலம் அவர்களை இயல்பு வாழ்க்கைக்குத் திருப்புதலையும் மேற்கொண்டோம். இந்தச் சேவைக்கென இற்றைவரை 12,105 டொலர்கள் சிறுவர் நலன்காப்பு நிதியத்தினூடாக செலவாகியிருக்கிறது



## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கு கல்விசார் மேம்படுத்தல் பயிற்சியளிக்கும் திட்டம்:

யுத்த நிலைமையினால் தங்கள் கல்வியில் மிகவும் பின்தங்கியிருந்த வன்னிப்பிரதேச மாணவர்களிற் சிலரைத் தெரிவு செய்து அவர்கள் தோற்றவுள்ள க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் கடினமான பாடங்களிலும், விஞ்ஞான பாடங்களிலும் அவர்களை தயார்படுத்தல் மற்றும் தேவையான பயிற்சிகளை அளித்தல் என்ற தேவையின் நிமித்தம், இவ்வாண்டும் எமது கழகம் அம்மாணவர்களுக்கான மேம்படுத்தல் பயிற்சியை மேற்கொள்ளத் தேவையான பணஉதவியை செய்தது.இந்தச் சேவையில் ஏற்படக்கூடிய உணவு, பயிற்சி உபகரணங்கள், ஆசிரியர் கொடுப்பனவுகள் போன்ற செலவுகளிற்காக 5,170 டொலர்கள் கொடுக்கப்பட்டன.

இத்திட்டங்களுக்கு 2015ல் இற்றைவரை 48,780 டொலர்கள் எமது கழகம் செலவழித்திருக்கிறது



ஒஸ்ரேலிய தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பொறுப்பெடுத்திருக்கும் இப்பாரிய மனிதாபிமான சேவைகள் கைகூடுவதற்கு, தொடர்ந்தும் உறுதுணையாக நின்று உதவிக்கரம் நீட்டிவரும் அன்புள்ளங்களுக்கு, தாயக உறவுகள் சார்பாக, சிரம்தாழ்த்தி நன்றிசொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

இவ்வாண்டு நடாத்தப்படும் நத்தார் வேண்டுதலால் கிடைக்கப்பெறும் நிதியானது "பெண்கள் தலைமையிலாக குடும்பங்களின் வாழ்வாதார உதவித் திட்டத்திற்காக" அர்ப்பணிக்கப்படவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். இந்த நன்னாளில், தமது மனிதாபிமான சேவைகளைத் தொடருவதற்கு, நிதிசேர்க்கும் நோக்கோடு ஒஸ்ரேலிய தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மார்கழி 25ல் ரேடியோத்தொன் நிகழ்ச்சியை, விக்ரோரிய ஈழத்தமிழ்ச் சங்கம் நடாத்தும் தமிழ்க்குரல் வானொலியூடாகவும், 24 மணிநேர இன்பத்தமிழ் ஒலி வானொலியூடாகவும் கடந்த 23 வருடங்களாக நடாத்திவருகிறது. உங்கள் உளமார்ந்த பங்களிப்பை, புனித நத்தார் வானொலி நிதிசேகரிப்பு நாளன்று (25/12/2015) கருணை கூர்ந்து வழங்குமாறு அன்பாக வேண்டிக் கொள்கின்றோம். மார்கழி 25ம் திகதி காலை 9 மணிமுதல் மாலை 6.30 மணி வரை, உங்கள் நன்கொடைகளை வழங்கத் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் **1300 721 399** (சகல மாநிலங்களுக்கும்). தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (ஒஸ்ரேலியா) ஆற்றிவரும் மனிதாப சேவைகளுக்கு தொடர்ந்தும் உறுதுணையாக நின்று உதவிக்கரம் நீட்டிவரும் அன்புள்ளங்களுக்கு சிரம் தாழ்த்தி நன்றிசொல்லக் கடமைப்பட்டுள்ளோம். இவ்வாண்டும் எமது நத்தார் வேண்டுதலுக்கு உங்கள் பங்களிப்புகளை முழுமனதுடன் நல்குவீர்களென எதிர்பார்க்கிறோம். நன்றி!

ACFID MEMBER

***T R O Australia is a member of the Australian Council for International Development.***